R 4989 (page 91) [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நீதிமான்கள் மற்றும் அநீதிமான்களின் உயிர்த்தெழுதல்

# THE RESURRECTION OF THE JUST AND OF THE UNJUST

R4990 : page 93

## சபைக்கும் பூமியிலிருப்பவர்களுக்குமான உறவு

ஆவிக்குரிய நிலையானது பரலோக நிலை என்பதாகப் பேசப்பட்டுள்ளது; ஆகையால் வேதவாக்கியங்களில் இடம்பெறும் வானம்/ பரலோகம்/ heaven மற்றும் heavenly என்ற வார்த்தைகள் உயர்வான எனும் அர்த்தத்தைக்கொடுக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் சபையானது அழைத்துச்செல்லப்படும் பரலோகம் என்பது, இந்த உயர்வான நிலையைக் குறிக்கின்றதாய் இருக்கும். ஆனால் அடுத்த யுகத்தில் சபையுடைய வேலை, மனுக்குலம் சம்பந்தப்பட்டதாகும். ஆகையால் கர்த்தரும், சபையும் சேர்ந்து காணப்படுவார்கள்; மனுஷர் வாயிலாக - பூமிக்குரிய பிரதிநிதிகள் வாயிலாக செயலாற்றுவார்கள், மேற்பார்வையிடுவார்கள், மேலாதிக்கம் பண்ணுவார்கள் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தக் கண்களுக்குப் புலப்படாத வல்லமைக்கான உதாரணத்தை நாம் சாத்தானில் பெற்றிருக்கின்றோம்; இவர் தனது பிரதிநிதிகள் மூலமாய், இங்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆளுகை செய்துகொண்டிருக்கின்றார். இவரது வேலை வஞ்சிக்கிற வேலையாகும். இவர் அறியாமை, மூடநம்பிக்கை முதலானவைகள் மூலம் மனுக்குலத்தினை ஆண்டுவந்திருக்கின்றார். ஆனால் கிறிஸ்துவினுடைய ஆளுகை, (உலகிலுள்ள) பிழைகளையும், மூடநம்பிக்கைகளையும் சிதறடித்துவிடும். உலகம் அப்பொழுது சத்தியத்தை அறிந்துகொள்ளும்; மேலும் சத்தியம் அவர்களை விடுதலையாக்கும். சத்தியத்தை ஏற்றுக்கொள்பவர்கள், விடுதலையைப் பெற்றுக்கொள்வார்கள்; இறுதியில் தேவனுடைய புத்திரர்களுக்கே உரிய சுயாதீனத்தை அடைவார்கள். கிறிஸ்துவின் கண்களுக்கு மனுஷர்கள் புலப்படுபவர்களாகவே இருப்பார்கள், ஆனால் கிறிஸ்துவோ, மனுஷரின் கண்களுக்குப் புலப்படுவதில்லை. பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், பன்னிரண்டு சிங்காசனங்களில் உட்கார்ந்து, இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களை நியாயந்தீர்ப்பார்கள் என்றும், உலகை நியாயந்தீர்க்கும் வேலையிலும், ஆளுகை செய்யும் காரியத்திலும் அப்போஸ்தலர்கள் கர்த்தரோடுகூட உடன்வேலையாட்களாக இருப்பார்கள் என்றும் கர்த்தர் கூறியுள்ளார்.

இன்னொரு வகுப்பாரும் காணப்படுகின்றனர்: "ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும், சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய இராஜ்யத்தில் காணும்போது" என்று வாசிக்கின்றோம். ஆனால் தம்மையோ அல்லது தமது அப்போஸ்தலர்களையோ மனுஷர்கள் காண்பார்கள் என்று நமது கர்த்தர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவரும், அவரது அப்போஸ்தலர்களும், இராஜ்யத்தினுடைய கண்களுக்குப் புலப்படாத பாகத்தில் காணப்படுவார்கள். "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்" என்று எழுதப்பட்டுள்ளது (சங்கீதம் 45:16). முற்பிதாக்கள் பிள்ளைகளாகக் கருதப்படுவார்கள். தகப்பன் என்பவர் ஜீவன் கொடுப்பவராவார். ஒருவிதத்தில் ஆபிரகாம், ஈசாக்கு முதலானவர்கள் பிதாக்களாகக் கருதப்பட்டாலும், கிறிஸ்துவினுடைய மீட்கும் வேலையின் புண்ணியத்தின் மூலம், அவர் அவர்களுக்கு ஜீவன் கொடுப்பதினால், அவர்கள் அவருடைய பிள்ளைகளாவார்கள்; ஏனெனில் ஜீவன் கொடுக்கிறவர் தகப்பனாகவும், ஜீவனைப் பெற்றுக்கொள்பவர் பிள்ளையாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் பூமியெங்கும் பிரபுக்களாக இருப்பார்கள்; பரலோக தளத்தில் இல்லாமல், தங்களது உண்மையின் நிமித்தமாக "மேன்மையான

உயிர்த்தெழுதலை" அடைந்தவர்களாக, பூமிக்குரிய தளத்தில் காணப்படுவார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ***பரிபூரண மனுஷத்துவத்திற்கான மாதிரிகளாகக்*** காணப்படுவார்கள்; இவர்கள் ஒவ்வொருவரும் பிரபுவாக அல்லது அதிபதியாகக் காணப்படுவார்கள். இவர்களது ஞானமானது, மகிமையிலுள்ள சபையினால் கண்காணிக்கப்படும்/கட்டுப்படுத்தி ஆளப்படும் ஞானமாகக் காணப்படும்.

---------------------